தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு

# 2011

# தமிழ்மொழி

## ஆண்டு 5

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்து எழுதுக.

1. தமிழ்மொழியில் உள்ள உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

_______________________________.

( 247, 246, 216 )

2. குமுகாயத்தில் ஒருவனை அடையாளங் காட்டுவது

__________________________.

( மொழி, மதம், நாகரிகம் )

3. _______________________ தாயகத்துக்குப் போகின்றார்கள்.

( அவள், அவர்கள், அவன் )

4. காடும் காடுசார்ந்த இடமும் ______________________ எனப்படும்.

tedc.org.uk

( மருதம், நெய்தல், முல்லை )

5. மன்னார்ப் பட்டினத்தில் அமைந்திருந்த துறைமுகம்

_____________________.

( மாதோட்டம், திருமலை, பாலாவி )

6. வையகம் என்ற சொல் குறித்து நிற்பது ____________________.

( வானம், மலை, உலகம் )

7. முள் + செடி இதைச் சேர்த்து எழுதினால் ______________________.

( முள்செடி, முட்செடி, முட்ச்செடி )

8. ஒன்று பட்டால் உண்டு ____________________.

( தாழ்வு, வீழ்வு, வாழ்வு )

9. பொங்கலன்று வைகறையில் எழுந்து நீராடுவர். வைகறை என்பது

____________________

( மதியம், அதிகாலை, மாலை )

10. சிற்பக்காடு என்று அழைக்கப்பட்ட ஊர்____________________.

( உருத்திரபுரம், தோமையாபுரம், மாமல்லபுரம் )

11. ____________________ முகவரியைச் சொல்கிறாயா?

( நீங்கள், உனது, உங்கள் )

12. பகைவரது செருக்கை அடக்கும் ஆயுதம்

____________________.

tedc.org.uk

( வாள், கல்வி, செல்வம்)

13. பொதுமக்களுக்காக ஆடப்படும் கலை ____________________

( வேத்தியல், பொதுவியல், கூத்தியல் )

14. பவளக்கொடி என்ற பாடலைப் பாடியவர்

____________________.

( சோமசுந்தரப்புலவர், சின்னத்தம்பிப் புலவர், பாரதிதாசன்)

15. மான் குய்யிடும் அது போல் சிங்கம் ____________________.

( கதறும், முழங்கும், பிளிறும் )

16. ஆக்கம் என்ற சொல்லின் எதிர்ப்பொருள் ______________________.

( எடுத்தல், வைத்தல், அழித்தல் )

17. குறிஞ்சியின் சலங்கைகள் கலீர் கலீர் என ______________________ எழுப்ப நடனமாடினாள்.

( ஒளி, ஒலி, ஒழி )

18. ஒலிம்பிக் வளையங்கள் ______________________க் குறிக்கின்றன.

( கண்டங்களை, ஊர்களை, நாடுகளை )

19. உறவுகளை அழைத்து உண்ணும் பறவை ______________________

( புறா, குயில், காகம் )

20. மாட்டுவண்டி வீதியில் ______________________ என்று சென்றது.

( படபட, கடகட, தடதட )

21. மாதவியால் நேற்று நடனம் ______________________.

tedc.org.uk

( ஆடப்பட்டது, ஆடினாள், ஆடுவாள் )

22. நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரி ______________________.

( மீன், முதலை, மான் )

23. ஆடற்கலை பற்றி விரிவாகக் கூறும் நூல் ______________________.

( வளையாபதி, மணிமேகலை, சிலப்பதிகாரம் )

24. முல்லை நிலத்தில் பெரிதும் காணப்படும் தமிழர் வீரத்துடன் தொடர்புடைய மரம் ______________________________.

( பனை, வாகை, வேம்பு )

25. கடலலை என்பதைப் பிரித்தால் ________________________.

(கடல் + அலை, கடற் + அலை, கட + அலை)

26. கசப்பை நீக்கும் சுவை ____________________.

( துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு )

27. கணிகன் என்ற சொல் குறித்து நிற்பது ________________________.

( சோதிடனை, கலைஞனை, உழவனை )

tedc.org.uk

28. முல்லை நிலத்தில் வாழும் தமிழீழத்தின் சிறப்பிற்குரிய பறவை

__________________________. ( மயில், செண்பகம், கோழி )

29. அடர்ந்த சிறு மரஞ்செடிகளைக் குறிக்கும் ஒரு சொல்

______________________________ ( பற்றை, தோப்பு, காடு )

30. மன்னார் மாவட்டத்துக்கு வளம் சுரக்கும் நீரேரி

________________________.

( வவுனிக்குளம், கட்டுக்கரைக்குளம், கந்தளாய்க்குளம்)

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

நாள்தோறும் நாம் பலவகை உணவுகளை உண்ணுகின்றோம். இவ்வுணவுகளின் சுவைகளை ஆறாகப் பிரித்தனர். அவை கைப்பு, இனிப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பனவாகும். பாகற்காயை உண்ணுகின்றோம். அது கைப்புச்சுவையுடையது. தேன் இனிக்கிறது. உப்பு உவர்க்கிறது. தக்காளிப்பழம் கலப்புச் சுவை உடையது. இயற்கையாகவே சுவைகளை அறிகின்றோம். தமிழர் விழா நாட்களில் அறுசுவை உணவுகளை சமைத்து உண்டு மகிழ்வர். உடல் உறுதி அடைவதற்கும் நாம் நோயற்று வாழவும் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

1. சுவைகளை எத்தனை வகையாகப் பிரித்தனர்?

______________________________

______________________________

2. அறுசுவைகளும் எவை?

______________________________

______________________________

tedc.org.uk

3. பாகற்காய் என்ன சுவையுடையது?

______________________________

______________________________

4. கலப்புச் சுவையுடைய பழம் எது?

______________________________

______________________________

5. நாம் நோயற்று வாழ்வதற்கு எவ்வகையான உணவுகளை உண்ண வேண்டும்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| அல்லும்பகலும் | பச்சைப்பசேலென | கல்விகேள்விகளில் |
|---|---|---|
| அக்கம்பக்கம் | நடுநடுங்கி | |

1. சிலம்பரசன் ........................................ சிறந்து விளங்கினான்.
2. பாம்பைக் கண்ட குயிலன் ........................................ அழுதான்.
3. வன்னியில் நெல்வயல்கள் ........................................ செழித்துக் கிடந்தன.
4. குமரன் தன் குடும்பத்திற்காக ........................................ அயராது உழைத்தான்.
5. பாட்டி ........................................ பார்த்து வீதியைக் கடந்தார்.

tedc.org.uk

(புள்ளிகள் 10

4) பாடநூல் வினா - **ஏழினுள் ஐந்திற்கு** விடை எழுதுக.

1. இறக்குமதி என்றால் என்ன?

___

___

2. நானிலங்களும் எவை?

___

___

3. சுற்றந்தழால் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

4. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி எந்த நாட்டில் தொடக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

5. ஆடற்கலையின் இரு பிரிவுகளைத் தருக?

______________________________________________

______________________________________________

6. மாமல்லபுரம் என்ற பெயருக்கு காரணமான மன்னனது பெயர் என்ன?

______________________________________________

______________________________________________

tedc.org.uk

7. சொற்பொருள் தருக?

விரவி ____________ வேழம் ____________

பழனம் ____________ பிணிகள் ____________

(புள்ளிகள் 10

5) பாடல்- வினாக்களுக்கு முழுவிடை தருக.

*ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் நாங்கள்*
*ஒன்றாய்க் கூடி வாழ்ந்திடுவோம்*
*விழுதாய் முளைக்கும் துன்பம் தன்னை*
*வெட்டி எறிந்தே வீசிடுவோம்*

*உண்மையைப் பேசி உயர்ந்திடுவோம்*
*உலகில் புகழுடன் வாழ்ந்திடுவோம்*
*என்றும் கல்வியைக் கற்றிடுவோம்*
*எண்ணம் போலே வாழ்ந்திடுவோம்.*

*பழுதாய்ப் போன மனத்தினைக் கூட*
*பாசத்துடனே திருத்திடுவோம்*
*அழுதால் அணைப்போம்*
*அன்பைக் கொடுப்போம்*

1. விழுதாய் முளைப்பது எது?

___________________________________________

2. எதைப்பேசி உயர்ந்திடுவோம்?

tedc.org.uk

___________________________________________

___________________________________________

3. பழுதாய்ப் போன மனதை எப்படித் திருத்த வேண்டும்?

___________________________________________

___________________________________________

4. உலகில் நாம் எப்படி வாழ வேண்டும்?

___________________________________________

___________________________________________

5. ஒன்றாயக் கூடி வாழ்பவர் யார்?

___________________________________________

(புள்ளிகள் 10)

6) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| வீரனது | ஈந்தவர்கள் | நடுகல் | தொல்காப்பியம் | வழிபடும் |
|---|---|---|---|---|

சங்கத்தமிழ் நூல்களில் புறநானூறும் ஒன்று. அது தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறுகிறது. அதிலுள்ள பதின்மூன்று பாடல்களில் ........................................ வழிபாட்டைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ் இலக்கணநூல் ......................................... அதை எழுதியவர் தொல்காப்பியர். தொல்காப்பியத்தில் நடுகல் நடப்படும் முறைகள், அதனை ........................................ முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. தாய்மண்ணிற்காகத் தம்முடைய உயிரை ........................................ நடுகற்களில் வாழ்கின்றனர். நடுகற்களில் ........................................ உருவம் பெயர் என்பன பொறிக்கப்பட்டிருக்கும். நடுகற்கள் தெய்வீகம் உடையவை.

tedc.org.uk

(புள்ளிகள் 10

**7) பந்தியைத் வாழிட மொழிக்கு மாற்றுக.**

மாறனும் அகிலனும் நல்ல நண்பர்கள். அவர்கள் இருவரும் தமிழ்ப்பள்ளியில் தமிழ் கற்கின்றார்கள். இருவரும் ஓய்வு நேரங்களில் காற்பந்து விளையாடுவார்கள். அவர்களின் உறவினர்கள் தாயகத்தில் வாழ்கின்றனர். அதனால் அவர்கள் தாயகத்தைப் பற்றி அடிக்கடி பேசிக்கொள்வர்.

tedc.org.uk

(புள்ளிகள் 05)

8) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

- ஒற்றுமையே வலிமை (பாடநூலில் உள்ள பாடலின் கதையை எழுதுக)
- ஆடற்கலை
- பிறந்தநாள் விழா

(புள்ளிகள் 15)